*8*

# நமது பெற்றோர்களுக்கு நாம் செலுத்த வேண்டிய ஏழு கடன்கள்

***வேதபாடப் பகுதி:*** *எபேசியர் 6:1-4.*

*இந்தத் தொடரில் நாம், பொதுவாக குடும்பத்தைப் பற்றிப் படித்துள்ளோம். நாம் கணவர்/மனைவி உறவுமுறை பற்றிக் கலந்துரையாடியுள்ளோம், நாம் பெற்றோர்/பிள்ளை உறவுமுறை பற்றிப் பேசினோம், இதில் பெற்றோரின் பொறுப்பை வலியுறுத்தியுள்ளோம். இந்த கடைசிப்பாடத்தில் நான், பிள்ளையினுடைய பொறுப்பைக் குறித்து எடுத்துரைக்க விரும்புகின்றேன். "நமது பெற்றோர்களுக்கு நாம் செலுத்த வேண்டிய ஏழு கடன்கள்"[1] பற்றிக் கண்ணோக்குவோம்.*

*சிலர் தங்கள் பெற்றோர்களுக்குத் தாங்கள் எவ்விதத்திலும் கடன்பட்டிருப்பதில்லை என்று கூறுவார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான ஒரு திரைப்படத்தில், ஒரு தந்தை தனக்கு மதிப்பளித்தல் வரவேண்டும் என்று வலியுறுத்துவார். வளர்ந்த அவரது மகனோ, தனது தந்தைக்குத் தான் எவ்விதத்திலும் கடன்பட்டிருப்பதில்லை என்று பதில் அளிப்பான். அவன், தான் இந்த உலகத்தில் வரும்படிக் கேட்டுக்கொண்டதில்லை என்றும், தனது இருப்பிற்குத் தனது தந்தையே பொறுப்பாளியாக இருப்பதால், அவர்தான் தனக்குக் கடன்பட்டுள்ளார் என்றும் பதில் அளிப்பான்.*

*வேதாகம நோக்கங்கள் ஒருதலைப் பட்சமானவைகளாய் இருப்பதில்லை. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு - உலகத்தில் அவர்களின் இருப்பிற்குத் தாங்களே பொறுப்பாளிகளாய் இருப்பதால் - அதிகம் கடன்பட்டுள்ளனர் என்று அது வலியுறுத்தும் அதே வேளையில், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குச் சிலவற்றில் கடன்பட்டுள்ளனர் என்றும் வலியுறுத்துகிறது. பெற்றோர்கள் இருந்திருக்கவில்லையென்றால், பிள்ளை உயிருடன் இருக்க முடியாது. வாழ்வின் கொடை என்பது ஒரு சிறப்பான கொடையாக உள்ளது.*

*இவ்விதமாக, எபேசியர் 6:1-4 பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அறைகூவல் விடுக்கிறது:*

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

சில பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் மாத்திரமே பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர் என்பதுபோன்று வாழ்கின்றனர். சில பிள்ளைகள், தங்கள் பெற்றோர்கள் மாத்திரமே பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர் என்பது போன்று வாழ்கின்றனர். இவ்விரண்டு எண்ணப்போக்குகளுமே சரியானவை அல்ல. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள்மீது அக்கறை செலுத்தவும் அவர்களைப் பயிற்றுவிக்கவும் பொறுப்புக் கொண்டுள்ளது எவ்வாறு என்று ஏற்கனவே நாம் கண்டிருக்கின்றோம். இதைத் திருப்பிக்கொடுக்க, நாம் நமது பெற்றோர்களுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் என்ன?[2]

## நமது பாராட்டுதல்

மக்கள் தேவனிடத்தில் இருந்து திரும்புதல் பற்றிப்பேசுகையில் பவுல், அவர்கள் எவ்வளவு தேவபக்தியற்றவர்களாக மாறியிருந்தனர் என்பதற்குப் பின்வரும் சுட்டிக்காண்பித்தலை உள்ளடக்கினார்: "அவர்கள் ... நன்றியில்லாதவர்களாய் ..." (ரோமர் 1:21).

நாம் யாருக்கேனும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றால், அது நமது பெற்றோர்களிடம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டியதாகவே உள்ளது. அவர்கள் நமக்கு வாழ்வு என்ற கொடையைக் கொடுத்தனர் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அவர்கள் நம்மீது அன்பு செலுத்தி நம்மைப் பராமரித்தும் இருக்கின்றனர்.[3]

பெர்கென் ஈவன்ஸ் என்பவர் ஒருமுறை, பென் (சில்வேனியா) மாகாணப் பல்கலைக் கழக மாணவர்களின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றினார். முந்திய தலைமுறையினர் சாதித்திருந்தது என்ன என்பதைப் பாராட்டாத - உலகத்தில் உள்ள தீமைகளுக்காகத் தங்கள் பெற்றோர்களைக் குற்றம் சாட்டியிருந்த இளம்மக்களான - இளைஞர்களிடத்தில் தாம் பேசிக்கொண்டிருந்ததை அவர் உணர்ந்தறிந்தார். அவர் தமது உரையில், அவர்களின் பெற்றோர்களுடைய தலைமுறையினர், உயிர்வாழும் கால அளவை உயர்த்தியிருந்தனர், நாளின் சராசரி தனிநபர் வருமானத்தை உயர்த்தி, சராசரி வேலைநாளைக் குறுக்கி அதேவேளையில் உற்பத்தியைப் பெருக்கியிருந்தனர், மற்றும் தாங்கள் கண்டறிந்திருந்ததைக் காட்டிலும் அதிக ஆரோக்கியமான உலகைக் கொடுத்திருந்தனர் என்று அவர் சுட்டிக்காண்பித்தார்.[4] அவர்களின் பெற்றோர் தலைமுறை மற்றும் அதற்கு முந்திய தலைமுறையினால் ஏற்படுத்தப்பட்டிருந்த தியாகங்களைப் பற்றியும், அந்த தலைமுறைகள், தங்கள் பிள்ளைகளுக்கு வாழ்வானது மேன்மையானதாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்து இருந்ததைப்

பற்றியும் அவர் பேசினார்.

தமது உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களிடத்தில் அவர், ''உங்களுக்கு அவர்கள் மிகச்சிறந்தவற்றைக் கொடுத்ததால், நீங்கள் மிக உயரமானவர்களாக, மிகவும் ஆரோக்கியமானவர்களாக, மிகவும் அறிவார்ந்தவர்களாக, மற்றும் பூமியில் குடியிருப்பவர்களிலேயே, அனேகமாக மிகவும் சிறந்தவர்களாகக் காணப்படுகின்றீர்கள்'' என்று கூறினார். அவர்களுடைய பெற்றோர்களின் முயற்சிகளினால் அவர்கள், "கொஞ்சநேரமே வேலைசெய்து, அதிகம் கற்று, நிறைய ஓய்வுநேரத்தைக் கொண்டிருந்து, அதிக தூரத்தில் உள்ள இடங்களுக்குச் சென்று, தங்கள் வாழ்வின் பேரார்வங்களைப் பின்பற்ற அதிகவாய்ப்பு கொண்டுள்ளனர்" என்பதை அவர் நினைவூட்டினார்.

அவர் தமது உரையைப் பின்வரும் சிந்தனையுடன் முடித்தார்: "உங்கள் தலைமுறையானது இந்த இரு தலைமுறைகளைப்போல் அவ்வளவு அதிக மான வளர்ச்சிகளை ஏற்படுத்தக்கூடும் என்றால், நீங்கள் பூமியில் இன்னும் நிலைத்திருக்கும் பல்வேறு தீமைகளுக்குத் தீர்வுகாணக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். … ஆனால் அது சுலபமாயிராது. அதை நீங்கள் எதிர்மறையான சிந்தனையினால் செயல்படுத்த இயலாது, அல்லது இடித்துப்போடுதல் அல்லது சிறுமைப்படுத்துதல் என்ற சிந்தனையினால் செயல்படுத்தவும் இயலாது. அதை நீங்கள் கடின உழைப்பினாலும், தாழ்மையினாலும், மனிதகுலத்தின் மீதுகொண்ட நம்பிக்கையினாலும் செயல்படுத்த முடியும்."[5]

நமது பெற்றோர்கள் நம்மை ஒரு பரிபூரணமான உலகத்தினுள் அறிமுகப்படுத்தவில்லை. இவ்வுலகமானது பாவத்தினால் கறைப்பட்டுக் கிடக்கிறதே (ஆதியாகமம் 3:17, 18). இருப்பினும், நித்தியத்திற்கென்று நம்மை நாம் தயாரித்துக்கொண்டிருக்கும் வேளையில் பூமியானது, வாழ்வதற்கு முற்றிலும் மோசமான இடமாக இருப்பதில்லை. நமக்கு முந்திய தலைமுறையினர் ஒரு சிறிது பாராட்டிற்கு உரியவர்களாய் இருக்கின்றனர்.

மனோதத்துவ அறிஞர்களின் கூற்றுப்படி, மனிதர்கள் தாங்கள் மதிப்புக்கொண்டுள்ளனர் என்று உணருதல், பாராட்டப்படுவதற்கான தேவையைக் கொண்டுள்ளனர் என்பது அவர்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக உள்ளது. அந்த முடிவுக்கு வேதாகமம் கருத்து வேறுபடுவதில்லை.[6] நீங்கள் உங்கள் பெற்றோர்களை பாராட்டுகிறீர்களா? அவர்கள் உங்களுக்காகச் செய்துள்ள யாவற்றையும் நீங்கள் பாராட்டுகின்றீர்களா? நீங்கள் அவர்களைப் பாராட்டுவதாக அவர்களிடத்தில் கூறுகின்றீர்களா?

## நமது மரியாதை

நாம் நமது பெற்றோருக்கு மரியாதை செலுத்தக் கடன்பட்டுள்ளோம் - இது அவர்கள் எப்போதும் சரியானவர்களாய் இருக்கின்றனர் என்பதற்காக அல்ல, ஆனால் அவர்கள் நமது பெற்றோராய் இருக்கின்றனர் என்பதற்காகவே ஆகும். அந்த அடிப்படைச் சத்தியம் மிக நீண்டகாலத்திற்கு

*முன்பே, பத்துக்கட்டளைகளில் வலியுறுத்தப்பட்டது: "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத்திராகமம் 20:12). "கனம்பண்ணுவாயாக" என்ற வார்த்தை அதனுடன் இணைந்து செல்லும் சகல மரியாதையையும் சுற்றிச் சூழ்ந்துகொண்டுள்ளது. இந்த கட்டளை லேவியராகமம் 19:3ல் திரும்பக்கூறப்பட்டபோது, "உங்களில் அவனவன் தன்தன் தாய்க்கும் தன்தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும்"[7] என்று வாசிக்கப்பட்டது.*

*இந்தக் கட்டளையானது கீழ்ப்படியும் பிள்ளைகளுக்கு வியப்பூட்டும் ஆசீர்வாதத்தை உள்ளடக்கிற்று: "உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு." அவர்கள் கீழ்ப்படியாமைக்கென்று கொலைசெய்யப்படாதிருப்பார்களென்பதால் (நாம் சற்றுநேரத்தில் இதைக் காண்போம்), அவர்கள் நாட்கள் "நீடித்திருக்கும்." அவர்கள் தங்கள் வாழ்நாளை நீடிக்கச்செய்யக்கூடிய நற்பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்வார்கள் என்பதாலும் அவர்களின் நாட்கள் நீடித்திருக்கும். மிக முக்கியமாக, அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிகின்றார்கள் என்பதால் அவர்களின் நாட்கள் நீடித்திருக்கும், மற்றும் தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார்.*

*பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குக் கனம் செலுத்த வேண்டும் என்ற இந்த அடிப்படை அறிவுறுத்தலானது உபாகமம் 5:16ல் மறுபடியும் எடுத்துரைக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டது:*

> *உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக்கொடுக்கிற தேசத்திலே, உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.*

*அந்த வேளையில் மோசே, இது தேவனிடத்தில் இருந்து நேரடியாக வந்த கட்டளை என்பதை வலியுறுத்தினார். கூடவிருந்த ஆசீர்வாதமும் விரிவாக்கப்பட்டது. "நீ நன்றாயிருப்பதற்கு" என்பது பொதுவான ஆசீர்வாதமாயிருந்தது. குடும்பத்தில் மரியாதையைக் கற்றுக்கொள்ளுகின்ற பிள்ளைக்கு வாழ்வு "நன்றாய் இருக்கும்": அவன் அல்லது அவள், ஒரு மேன்மையான மாணவனாக/மாணவியாக, ஒரு மேன்மையான துணையாக, ஒரு மேன்மையான பெற்றோராக, ஒரு மேன்மையான வேலையாளாக அல்லது வேலை அளிப்பவராக இருப்பான்(ள்).*

*உபாகமம் 27ல், இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்கவிருந்த வேளையில், உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்காக அறிவுறுத்தல்களை மோசே கொடுத்தபோது, இதே கட்டளை உள்ளடக்கப்பட்டது - ஆனால் இது எதிர்மறைவடிவில் இருந்தது: "தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன்[8] சபிக்கப்பட்டவன்" (வசனம் 16அ).*

*புதிய ஏற்பாட்டில், ஐசுவரியவானாயிருந்த இளைஞன் இயேசுவினிடத்தில் வந்து, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, இயேசு "உன் தகப்பனையும்*

*உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" என்ற கட்டளை உட்பட (லூக்கா 18:20) பத்துக்கட்டளைகளில் பலவற்றை மறுபடியும் உரைத்தார். அந்த இளைஞன், "நான் இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்" (வசனம் 21) என்று கூறக்கூடியவனாக இருந்தான்.*

*பெற்றோர்களுக்குக் கனம் செலுத்துதல் என்பது, வார்த்தைக்கு வார்த்தை அப்படியே இயேசுவின் புதிய ஏற்பாட்டில் திரும்பக்கூறப்படும் அளவுக்கு அவ்வளவாய் அடிப்படையான தேவையாக உள்ளது: "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" (எபேசியர் 6:2, 3).*

*நமது பெற்றோருக்கு நாம் எவ்வாறு கனம்செலுத்த முடியும்?*

*(1) நாம் நமது பெற்றோருடன் பேசுகின்ற வகைமுறையில், மரியாதையை (அல்லது மரியாதைக் குறைவைக்) காண்பிக்கின்றோம். ஏசாயா 45:10ல் பின்வரும் வினோதமான வசனத்தைக் காணுகின்றோம்: "தகப்பனை நோக்கி: ஏன் ஜநிப்பித்தாய் என்றும், தாயை நோக்கி: ஏன் பெற்றாய் என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ!"* KJV *வேதாகமத்தில்,* "Woe unto him that saith unto *his* father, What begettest thou?" *என்றுள்ளது.* The Living Bible *என்ற வேதாகமம் இதைப் பின்வருமாறு பொழிப்புரை செய்துள்ளது:* "Woe to the baby just being born who squalls to his father and mother, 'Why have you produced me? Can't you do anything right at all' " *என்றுள்ளது. சந்தர்ப்பப்பொருளில் எழுத்தாளர், தேவனிடத்தில் மனிதன் கொண்டுள்ள எண்ணப்போக்கைப் பற்றிப்பேசினார், ஆனால் இது எல்லாவற்றிற்கும் தனது பெற்றோர்களைக் குற்றப்படுத்துகின்ற, மரியாதைக் குறைவான ஒரு இளம் நபரை அளவையியல் ரீதியாகச் சித்தரிக்கிறது.*

*பழைய ஏற்பாட்டில், தனது தகப்பனையும் தாயையும் சபித்த ஒருவன் கல்லால் எறிந்து கொலைசெய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டது (யாத்திராகமம் 21:17; லேவியராகமம் 20:9; நீதிமொழிகள் 20:20; நீதிமொழிகள் 30:11ஐயும் காணவும்). அந்தக் கட்டளையை இன்றைய நாட்களில் சிறிதளவாவது அமுல்படுத்த முடியுமென்றால், மக்கள் தொகையானது கணிசமாகக் குறைந்துவிடும்.*

*(2) நாம் நமது பெற்றோர்களைப் பற்றி பேசும் வழிமுறையிலும் அவர்களுக்கு மரியாதையை (அல்லது மரியாதைக் குறைவைக்) காண்பிக்கிறோம். காம் என்பவன் தனது தந்தையின் பரிதாபத்திற்குரிய நிலையைப் பரியாசம் செய்தபோது,[9] அவன் சபிக்கப்பட்டான் (ஆதியாகமம் 9:20-25).*

*(3) நாம் செயல்படுகின்ற வகையிலும்கூட மரியாதையை (அல்லது மரியாதைக் குறைவைக்) காண்பிக்கின்றோம்; ஒருவர் மரியாதைக் குறைவாய் நடந்துக்கொள்வதற்கு வார்த்தைகள் அவசியமற்றவைகளாய் இருக்கின்றன. நீதிமொழிகள் 30:17, "தகப்பனைப் பரியாசம் பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்" என்று உரைக்கிறது. அதை நான்*

வாசிக்கும்போது, இளம்வயதினன் ஒருவன் கடிந்துக்கொள்ளப்பட்ட பின்பு, "நான் என்ன சொல்லிவிட்டேன்?" என்று மறுத்துரைப்பதையும், அவனது பெற்றோர், "நீ கூறியதல்ல, ஆனால் நீ உன் கண்களை உருட்டிய விதமே சரியற்றதாக இருக்கிறது" என்று பதில் அளிப்பதையும் காணமுடிகிறது.

பழைய ஏற்பாட்டில், எவ்வகையிலாவது தனது பெற்றோரைத் தவறாக நடத்திய பிள்ளை வெட்கக்கேடாகவும் அவகீர்த்தியாகவும் இருந்தான்(ள்) (நீதிமொழிகள் 19:26). பெற்றோரை அடித்தவன் மரணத்திற்கு ஆளாக்கப்பட வேண்டும் (யாத்திராகமம் 21:15). பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு மரியாதை காண்பிக்கக்கூடிய - அல்லது அவமரியாதை காண்பிக்கக்கூடிய - விஷயங்கள் பற்றி நாம் ஒரு நீண்ட பட்டியலை ஏற்படுத்தமுடியும்.

மீகா, தமது நாட்களின் சூழ்நிலை எவ்வளவு மோசமாய் இருந்தது என்று கூறும்போது, "(ஒரு) மகன் (தனது) தகப்பனைக் கனவீனப் படுத்துகின்றான்; மகள் தன் தாய்க்கு விரோதமாக ... எழும்புகிறாள் ..." என்று அவர் எடுத்துரைத்தார் (மீகா 7:6). நாம் நமது பெற்றோர்களுக்கு மரியாதை செலுத்தக் கடன்பட்டிருக்கின்றோம்.

## நமது கீழ்ப்படிதல்

நமது பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது அவர்களுக்கு மரியாதை காண்பிக்க வேண்டும் என்ற அறைகூவலுடன் தொடர்புடையதாக உள்ளது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியத்தவறுதல் என்பது வற்றாத ஒரு பிரச்சனையாக உள்ளது. பவுல் தமது நாட்களில் இருந்த இந்த நலிவைப் பற்றி விவரிக்கும்போது, அவர் பின்வரும் ஒருபொருட்பல சொற்களைப் பயன்படுத்தினார்: "வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், ... தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியா தவர்களாயும்."

சில ஆண்டுகளுக்கு முன்பு, எலெனார் ரூஸ்வெஸ்ட்[10] என்ற பெண்மணி, தமது அன்றாடச் செய்திப்பத்திரிக்கையில், "நமது உலகத்தைப் பற்றியும் குறிப்பாக, நமது இளைஞர்களைப் பற்றியும் கவலைப்படுகின்ற பலருக்கு, இன்றைய பிரச்சனைகள் என்பவை நீண்டகாலமாக நிலவியிருக்கின்றன என்பதை நினைத்தல் ஊக்கமுட்டுவதாக இருக்கும்" என்று எழுதினார்.[11] அடுத்ததாக, அவர், பின்வரும் கூற்றை மேற்கோள் காண்பித்தார்: "நமது பூமியானது இந்தப் பிந்திய நாட்களில் சீர்கெட்டுள்ளது; இலஞ்சமும் ஊழலும் பொதுவானவைகளாய் இருக்கின்றன; பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவதில்லை; உலகத்தின் முடிவு நெருங்கிக்கொண்டுள்ளது என்பது தெளிவு."[12] பின்பு அவர், இவ்வார்த்தைகள் கி.மு. 2800ம் ஆண்டுவாக்கில் எழுதப்பட்ட அசீரியக் கல்வெட்டு ஒன்றில் இருந்து வந்தது என்பதை வெளிப்படுத்தினார்.

திருமதி. ரூஸ்வெல்ட் இன்னொரு மேற்கோளையும் பகிர்ந்து கொண்டார்: "பிள்ளைகள் இப்போது ஆடம்பரத்தை விரும்புகின்றனர்; அவர்கள் மோசமான பழக்கங்களைக் கொண்டுள்ளனர், அதிகாரத்

துவத்தின்மீது வெறுப்புக்கொண்டுள்ளனர். பிள்ளைகள் இப்போது தங்கள் வீட்டாருக்கு வேலையாட்களாக இல்லாது, கொடுங்கோலர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தங்கள் பெற்றோர்களின் கருத்துகளுக்கு முரண்படுகின்றனர், தோழர்களுடன் வீண்பேச்சுப் பேசுகின்றனர், உணவுமேசைகளில் உள்ள ருசியான உணவுகளை (வயிற்றுக்குள்) கொட்டிக்கொள்கின்றனர், தங்கள் ஆசிரியர்களிடம் கொடுங்கோன்மை செய்கின்றனர்.''[13] இந்த வார்த்தைகள் கிறிஸ்துவுக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு பிளேட்டோ என்பவரால், பழங்காலக் கிரீஸ் நாட்டில் சாக்ரட்டீஸ் என்பவரின் கூற்றில் இருந்து மேற்கோள் காண்பித்து எழுதப்பட்டன.

எபேசியர் 6:1ன் போதனையானது எளிமையும் நேரானதுமாக உள்ளது: "பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்; இது நியாயம்." நமது பெற்றோர்கள் எப்போதுமே சரியானவர்களாய் இருக்கின்றனர் என்பதற்காக நாம் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமா? இல்லை, ஏனென்றால் ''இது நியாயம்'' என்றுள்ளது. கீழ்ப்படிந்திருத்தல் என்பது வாழ்வதற்குச் சரியான வழிமுறையாக உள்ளது. "கர்த்தருக்குள்'' என்ற சொற்றொடர், ஒரு கிறிஸ்தவராய் இருப்பதில், கர்த்தருடன் உங்களுக்குள்ள உறவைக் குறித்துச் செயல்படுவதாக உள்ளது. நீங்களும் உங்கள் பெற்றோரும் கிறிஸ்தவராக இருந்தால், அது உங்கள் உறவை இருமடங்கு சிறப்புடையதாக்குகிறது. உங்கள் பெற்றோர் கிறிஸ்தவராய் இராதிருப்பினும், நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும், ஏனெனில் இது தேவனுடைய சித்தமாக உள்ளது. "இது நியாயம்."

கொலோசெயர் 3:20ல், பவுல் இன்னும் ஓரிரு சிந்தனைகளைக் கூட்டினார்: ''பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது." "எல்லாக் காரியத்திலேயும்'' என்பது ''தேவனுடைய சித்தத்திற்கு நேரடியாக முரண்பட்டிராத எல்லாவற்றிலேயும்" என்று அர்த்தப்படுகிறது. (நடபடிகள் 5:29ஐக் காணவும்.) இதைச் செய்கின்ற பிள்ளை கர்த்தரைப் பிரியப் படுத்துவான் என்று பவுல் கூறினார். இயேசு, தேவனுடைய சொந்தக் குமாரனாயிருந்தார்; ஆனால் ஒரு இளம் வயதுப்பையன் என்ற வகையில் அவர், யோசேப்புக்கும் மரியாளுக்கும் "கீழ்ப்படிந்திருந்தார்'' (லூக்கா 2:51).

சிறுபிள்ளைகளை வழிநடத்த வேண்டிய அவசியத்தைப் பலர் காணுகின்றனர். சுறுசுறுப்பான நெடுஞ்சாலைகளில் அலைதல் அல்லது தீயுடன் விளையாடுதல் ஆகியவற்றில் இருந்து யாரேனும் ஒருவர் பிள்ளைகளைப் பாதுகாத்திராவிட்டால், ஒருசில பிள்ளைகளே பெரியவர்களாகும்படி, உயிர்பிழைத்து இருப்பார்கள். இளம் வயதினர் தங்களுக்கு வழிநடத்துதல் தேவை என்பதை உணராதிருக்கலாம், ஆனால் அவர்களுக்கு அது தேவைப்படுகிறது.

ஒருவர் தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? இது, ஒரு பிள்ளை தனது பெற்றோர் கூறுவதை, (அவர்கள் தனக்கு) திரும்பத் திரும்பத் தொல்லை கொடுத்தப்பின்பு

செய்யவேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை, உண்மையான கீழ்ப்படிதல் என்பது, பிள்ளையானவன் விரைவாக, களிப்புடன், கேட்கப்படுபவற்றை முன்னெதிர்பார்த்துக்கூடப் பதில்செயல் செய்தல் என்று அர்த்தப்படுகிறது. அதுவே தேவன் விரும்புகின்றதாக உள்ளது, மற்றும் அப்படிப்பட்ட நடத்தையானது எந்தப் பெற்றோருக்கும் களிப்பூட்டுவதாக இருக்கிறது.

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் குறித்துத் தேவன் அக்கறையுள்ளவராக இருக்கின்றார் - இது தனிப்பட்ட குடும்பங்களில் கொண்டுள்ள செயல்விளைவுகளுக்காக மாத்திரம் அல்ல, ஆனால் சமூகம் முழுவதிலும் கொண்டுள்ள செயல்விளைவுகளுக்காவும் ஆனதாக உள்ளது. எட்வர்டு L. கேஸ்ட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> *நீண்ட காலங்களுக்குப் பெற்றோரைச் சார்ந்திருந்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருத்தல் மூலம், பிள்ளைகள் தாங்கள் கற்றாக வேண்டிய மிகமுக்கியமான விஷயத்தைக் கற்றுக்கொள்கின்றனர் மற்றும் அது, மற்ற மக்களை நம்புதல் மற்றும் கடைசியில் தேவன்மீது நம்பிக்கை வைத்தல் என்பதாக உள்ளது. ஒரு பிள்ளை தனது பெற்றோர்மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், அவன் பிறர்மீது நம்பிக்கை வைப்பதற்கான அவனது திறன் மிகவும் கடுமை யாகப் பாதிக்கப்படுகிறது ... மனித சமூகத்தில், பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதைக் காட்டிலும் மிகத்தெளிவான உள்கட்டமைப்புள்ள தேவை வேறு எதுவும் இல்லை.*

கேஸ்ட் அவர்கள், பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பராமரித்தல் என்ற தங்கள் பொறுப்புகளை மதியாமல் விடுதல் என்பது பிள்ளைகள் தங்கள் பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல் என்ற தங்கள் பொறுப்புக்களை மதியாமல் விடுதல் போலவே வாதத்திற்குரியதாக உள்ளது என்று சுட்டிக்காண்பித்தார். அவர், “யாராவது ஒருவர் ஏன் யாராவது ஒருவருக்குக் கீழ்ப்படிய வேண்டியது ஏன்?” என்ற கேள்வியை எழுப்பி, பின்வரும் பதிலை அவரே கொடுத்தார்:

> *... சமுதாயம் என்பது மனிதமுயற்சியின் கூட்டுறவாக உள்ளது, எவரொருவரும் மற்றவரை, நியாயமான அதிகாரத்துவம் உள்ளவர் என்ற வகையில் கனப்படுத்தாது இருந்தால் சமுதாயம் எவ்வாறு செயல்பட முடியும்? குறிப்பிட்ட ஒரு சமூகத்தில், பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் இருத்தல் என்பது பொதுவான விஷயமாய் இருக்கும்போது, வரலாற்றாளர்கள் யாவரும் தங்கள் பென்சில்கள் மற்றும் எழுதுபலகைகளை எடுத்துக்கொண்டு அந்த சமூகத்தின் சரிவையும் வீழ்ச்சியையும் பற்றி எழுதத் தொடங்கிவிடுகின்றனர்.*[14]

கீழ்ப்படியாமையுள்ள பிள்ளைகள் சமூகத்தின்மீது கொண்டுள்ள செயல்தாக்கம், இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் கொடுத்திருந்த திகைப்பூட்டும் பின்வருகிற பிரமாணத்தில் பிரதிபலிக்கப்படுகிறது:

> *தன் தகப்பன் சொல்லையும் தன் தாயின் சொல்லையும் கேளாமலும், அவர்களால் தண்டிக்கப்பட்டும், அவர்களுக்குக் கீழ்ப்படியாமலும் போகிற அடங்காத துஷ்டப்பிள்ளை ஒருவனுக்கு இருந்தால், அவன் தகப்பனும் அவன் தாயும் அவனைப்பிடித்து, அவன் இருக்கும் பட்டணத்தின் மூப்பரிடத்துக்கும் அவ்விடத்து வாசலுக்கும் அவனைக் கொண்டுபோய்: "எங்கள் மகனாகிய இவன் அடங்காத துஷ்டனாயிருக்கிறான்; எங்கள் சொல்லைக் கேளான்; பெருந்தீனிக்காரனும் குடியனுமாயிருக்கிறான்" என்று பட்டணத்தின் மூப்பரோடே சொல்லுவார்களாக. அப்பொழுது அவன் சாகும்படி அந்தப் பட்டணத்து மனிதரெல்லாரும் அவன்மேல் கல்லெறியக் கடவர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கிப்போடவேண்டும்; இஸ்ரவேலர் எல்லாரும் அதைக்கேட்டுப் பயப்படுவார்கள் (உபாகமம் 21:18-21).*

*(நாம் கீழ்ப்பட்டுள்ள) புதிய ஏற்பாடு, நமது பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், அவர்களை (பிள்ளைகளை) கொன்றுபோடும்படி போதிப்பதில்லை, ஆனால் பழைய ஏற்பாட்டுக் கட்டளையானது பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டியதன் முக்கியத்துவத்திற்குத் தெளிவான ஒரு நினைவூட்டுதலாக உள்ளது.*

*பெற்றோர்கள் எப்போதுமே சரியானவர்களாய் இருப்பதில்லை, ஆனால் அவர்கள் உண்மையில் தங்கள் பிள்ளைகள்மீது அக்கறை கொண்டிருந்தால், அவர்கள் தவறாயிருப்பதைக் காட்டிலும் அதிகத் தருணங்கள் சரியாயிருப்பார்கள். இளம்வயதினரே, நீங்கள் உங்களைக்குறித்து அதிக அக்கறைகொள்கின்ற, உங்கள்மீது கட்டுப்பாடுகள் விதிக்கின்ற பெற்றோர்களை கொண்டிருந்தால், அந்தப் பெற்றோர்களை உங்களுக்கு கொடுத்தமைக்காகத் தேவனுக்கு நன்றிசெலுத்துங்கள்!*

*நாம் நமது பெற்றோருக்குக் கீழ்ப்படியக் கடன்பட்டுள்ளோம்.*

## நமது புரிந்துகொள்ளுதல்

*நான் அடுத்ததாகக் குறிப்பிடப்போகின்ற "கடன்" என்பது, பாராட்டுதல், மரியாதை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றுடன் நெருங்கிய பிணைப்புடையதாக உள்ளது; ஆனால் அவைகள் தனித்தனியே கலந்துரையாடப்படும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. பட்டியலில் அடுத்துள்ளது "புரிந்து கொள்ளுதல்" என்பதாகும். நமது பெற்றோர்களுக்கு நம்மால் இயன்ற அளவுக்கு அதிகமாகப் பரிவிரக்கமுள்ள புரிந்துகொள்ளுதலைத் தருவதற்கு நாம் கடன்பட்டுள்ளோம்.*

*முந்தியபாடம் ஒன்றில் நாம், கணவர்கள் தங்கள் மனைவியர்களோடு, "விவேகத்துடன் வாழ" வேண்டுமென்று புத்திகூறப்பட்டதைக் குறிப்பிட்டோம் (1 பேதுரு 3:7). அது குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறவுக்கும் மோசமான அறிவுரையாக இருப்பதில்லை. நாம்*

ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

இளம் வயதினர், "என் பெற்றோர்கள் என்னைப் புரிந்துகொள்வதில்லை" என்று கூவுவதை நான் கேள்விப்பட்டுள்ளேன். இந்த இளைஞர்களில் பலர், புரிந்துகொள்ளுதல் என்பது இருபக்கங்களிலும் செயல்படுகிறது என்பதை அறியாதவர்களாய் இருக்கின்றனர். நீங்கள் ஒரு இளம் வயதினராய் இருந்தால், புரிந்துகொள்ளுதலில் உள்ள குறைபாட்டின் மாபெரும்பங்கு உங்களிடம் இருக்கக்கூடியது என்பதை நீங்கள் ஆழ்ந்து சிந்தித்திருக்கின்றீர்களா? உங்கள் பெற்றோர்களும் ஒருகாலத்தில் உங்களைப்போன்றே இளம்வயதினராய் இருந்தவர்கள்தானே? இளம் வயதினராய் இருத்தல் என்றால் என்ன என்பதையும் வயது வந்தவராய் இருத்தல் என்றால் என்ன என்பதையும் அவர்கள் அறிந்துள்ளனர். இதற்கு மறுபுறத்தில், இளம் வயதினராய் இருத்தல் என்றால் என்ன என்பதை மாத்திரமே நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். உங்கள் தாயோ அல்லது உங்கள் தந்தையோ உங்கள் கண்ணோக்கத்தைக் காணவேண்டுமென்று நீங்கள் விரும்பலாம், ஆனால் அவர்களின் கண்ணோக்கைக் காண முயற்சிப்பதற்கு நீங்கள் எவ்வளவு நேரம் செலவிட்டிருக்கின்றீர்கள்?

இளம் வயதினராய் இருத்தல் என்பது இன்றைய நாட்களில் மிகவும் கடினமானதாக உள்ளது என்று சிலர் கூறுகின்றனர் - அது உண்மையானதே. இளம் வயதினருக்குப் பெற்றோராயிருத்தல் என்பதும் கடினமானதாகவே உள்ளது. இளம் வயதினரே, உங்கள் பெற்றோர்கள் முதிர்வயதுடையவர்கள் ஆகின்றனர் மற்றும் அவர்கள் களைப்படையக் கூடியவர்களாய் இருக்கின்றனர் என்பதை நீங்கள் ஆழ்ந்து சிந்தித்திருக்கின்றீர்களா? வியாபார உலகத்தில் அவர்கள் கடந்து செல்லக்கூடிய இடர்ப்பாடுகளை நீங்கள் ஆழ்ந்து சிந்தித்திருக்கின்றீர்களா? இன்றைய நாட்களின் "பொருளாதார நிலையில் தேவைகளைச் சந்திப்பது" என்பது அவர்களுக்கு எவ்வளவு கடினமாய் இருக்கிறது என்பதை நீங்கள் நினைத்துப்பார்த்திருக்கின்றீர்களா? உங்கள் தாயானவர், வாழ்வின் மாற்றங்களினுடே செல்லத்தொடங்கியிருக்கலாம் அல்லது உங்கள் தந்தை, "இடைவாழ்வின் இடர்ப்பாட்டை" எதிர்கொண்டிருக்கலாம் என்பதைப் பற்றி நீங்கள் அறிந்து இருக்கின்றீர்களா?

## நமது ஒத்துழைப்பு

நாம் நமது பெற்றோருக்கு இயன்ற அளவு ஒத்துழைப்புக்கொடுக்கக் கடன்பட்டிருக்கின்றோம். பெற்றோர்கள் அஞ்சத்தக்க பொறுப்புகளைக் கொண்டுள்ளனர். 1 தீமோத்தேயு 5:8, "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" என்று கூறுகிறது. எபேசியர் 6:4ல் தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளைக் "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்க" வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளனர். பெற்றோர்கள் தங்கள் குடும்பத்தினருக்கு உடல்ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் தேவையானவற்றைக் கொடுக்க வேண்டிய பொறுப்பைத் தேவன் அவர்களுக்கு நியமித்திருக்கின்றார்,

மற்றும் அவர்கள் தங்கள் உக்கிராணத்துவம் பற்றி ஒருநாளில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (1 கொரிந்தியர் 4:2). மூழ்கடிக்கச் செய்யும் அவர்களது பணிப்பொறுப்பை நாம் இயன்றவரையில் சுலபமாக்க வேண்டும்.

நமக்கு உடல்ரீதியானவற்றை அளிக்க வேண்டும் என்ற அவர்களின் பொறுப்புப்பற்றி, நாம் விரும்புகின்ற ஒவ்வொன்றையும் நாம் பெற்றிராதபோது, அவற்றைக்குறித்து முறையிடக்கூடாது. நமக்கு ஆவிக்குரியவற்றை அளிக்க வேண்டும் என்ற அவர்களின் பொறுப்புப்பற்றி, நாம் ஒத்துழைப்பவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நம்மை, "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கும்போது"[15] நாம் போதிக்கப்படக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். ஞானியான மனிதர், "என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 1:8, 9). மேலும் அவர் பின்வருமாறும் கூறினார்,

> என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகளை எப்பொழுதும் உன் இருதயத்திலே அணிந்து, அவைகளை உன் கழுத்திலே கட்டிக்கொள். நீ நடக்கும்போது அது உனக்கு வழிகாட்டும்; நீ படுக்கும்போது அது உன்னைக் காப்பாற்றும்; நீ விழிக்கும்போது அது உன்னோடே சம்பாஷிக்கும் (நீதிமொழிகள் 6:20-22).

உங்கள் பெற்றோர்களின் அறிவுறுத்தல்களை அணிகலன்களுக்கு ஒப்பிடுதலானது, நீங்கள் அவர்களின் அறிவுறுத்தல்களைக் கைக்கொண்டால், நீங்கள் அழகுமிக்க வாழ்வைக் கொண்டிருப்பீர்கள் என்று கூறுவதற்கான உருவகநடையிலான வழிமுறையாகும்.[16]

ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாய் இருக்க வேண்டியதின் முக்கியத்துவத்தை பல வசனப்பகுதிகள் வலியுறுத்துகின்றன: "என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்" (நீதிமொழிகள் 4:20); "நீ அவைகளில் நடக்கும்போது உன் நடைகளுக்கு இடுக்கண் உண்டாவதில்லை; நீ அவைகளில் ஓடினாலும் இடறமாட்டாய்" (நீதிமொழிகள் 4:13) இளம் வயதினரே, உங்கள் பெற்றோர்கள் சரியானவற்றை உங்களுக்குப் போதிக்க முயற்சிசெய்தால், அவர்களுக்காகத் தேவனுக்கு நன்றி கூறுங்கள்.

எட்வர்டு H. வொயிட் என்பவர், அப்போல்லோ 1 என்ற விண்வெளி ஓடம் ஜனவரி 27, 1967 அன்று கேப்கென்னடியில் வெடித்தபோது கொல்லப்பட்ட மூன்று விண்வெளி வீரர்களின் ஒருவராயிருந்தார். அந்த விபத்து நடப்பதற்கு முன்பு அவர் தமது பெற்றோர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறியிருந்தார்:

> நான் ஒரு பையனாக இருந்தபோது, பல இளைஞர்களைக் காட்டிலும் விசுவாசத்தில் அதிக உயிர்த்துடிப்பான ஆர்வம் கொண்டிருந்ததில்லை, ஆனால் தங்கள் சொந்த விசுவாசத்தை நான் புரிந்து கொள்ளக்கூடிய

வகையில் செய்தித்தொடர்பு ஏற்படுத்தக்கூடியவர்களாய் இருந்த பெற்றோர்களைக் கொண்டிருந்தேன். என் சகோதரன் ஜிம் என்பவரும் எனது சகோதரி ஜீன் என்பவளும், நானும், எங்களது பெற்றோர்கள் மதம் பற்றிய கேள்வியில் எங்கு நின்றிருந்தனர் என்பதில் சந்தேகம் கொண்டிருந்ததில்லை. எங்களது இல்லத்தில் இருந்த வேதாகமம் அலமாரியில் இருக்கக்கூடிய புத்தகமாக இருந்ததில்லை; அது வெளியே பயன்படுத்தக்கூடிய இடத்தில் இருந்தது. சபை என்பது அவ்வப்போது சென்றுவரக்கூடிய விஷய மாக இருந்ததில்லை; ஞாயிற்றுக்கிழமைகளில் சபைக்குச் செல்லுதல் என்பது வாழ்வின் இசைவுகளில் ஒன்றாக, திங்கள் அன்று துணிகளைத் துவைக்கும் நிகழ்ச்சிபோலிருந்தது.[17]

நமது பெற்றோர்கள் நம்மை "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் ..." வளர்க்க வேண்டிவர்களாய் இருக்கின்றனர். மீண்டுமாக, நாம் ஒத்துழைக்க வேண்டியவர்களாய் இருக்கவேண்டும். "மூடன் தன் தகப்பனின் புத்தியை அலட்சியம் பண்ணுகிறான்; கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி" (நீதிமொழிகள் 15:5; 12:1ஐயும் காணவும்). என் பெற்றோர்கள் என்னைச் சிட்சிக்கும்போது, அது அவர்கள் என்மீது கொண்ட அன்பினாலும் என்னை ஒரு பலமான கிறிஸ்தவ மனிதனாக வளர்க்கும்படியாகவும் இருந்தது.

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து" என்று உரைத்தார் (12:6அ). பின்பு அவர் நமது பரலோக தந்தைக்கும் நமது பூமிக்குரிய தந்தையர்களுக்கும் இடையில் ஒரு இணைகருத்தைக் கொண்டுவந்தார்: "அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மை சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க" (வசனம் 9அ). அடுத்ததாக, அவர் சிட்சித்தல் பற்றிப் பின்வரும் பொதுவான உற்றுநோக்கலை ஏற்படுத்தினார்: "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க்காணாமல் துக்கமாய்க்காணும் [பிள்ளைகளும் இளம்வயதினர் பலரும் "ஆமென்!" என்று சொல்லுவதை நான் ஏறக்குறையக் கேட்கமுடிகிறது]; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும்" (வசனம் 11).

இளம் வயதினரே, உங்கள் பெற்றோர்கள் உங்களைச் சிட்சிப்பதற்குப்போதிய அளவு அக்கறை எடுத்துக்கொண்டால், அதற்காகவும் நன்றிகூறுங்கள். நாம் நமது பெற்றோர்களுக்கு ஒத்துழைப்பதற்குக் கடன்பட்டுள்ளோம்.

## நமது மிகச்சிறந்தவைகள்

நாம் நமது பெற்றோர்களுக்கு, நம்மால் இயன்ற அளவுக்கு, மிகச்சிறந்த மகன்களாகவும் மகள்களாகவும் இருக்கக் கடன்பட்டுள்ளோம். நமது பெற்றோருக்கு நாம் உதட்டளவில் எவ்வளவு நன்றியுடையவர்களாய் இருந்தாலும், நாம் சரியான முறையில் வாழாவிட்டால், நாம் மரியாதை

நிறைந்தவர்களாய் இருப்பதில்லை. யாக்கோபின் மகன்கள் சரியானபடி செயல்படாதபோது, "... என் வாசனையை நீங்கள் கெடுத்ததினாலே, என்னைக் கலங்கப்பண்ணினீர்கள்" என்று யாக்கோபு கூறினார் (ஆதியாகமம் 34:30; KJV). ஏசாவினுடைய மோசமான திருமணமானது, "ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் மனநோவைக் கொண்டுவந்தது" (ஆதியாகமம் 26:35; 27:46ஐயும் காணவும்). நாம் முன்னதாக உபாகமம் 21ஐ மேற்கோள் காண்பித்தோம். பெற்றோர்கள், "எங்களது இந்த மகன் முரடனாகவும் கலகம் பண்ணுகிறவனாகவும் இருக்கின்றான், அவன் எங்களுக்குக் கீழ்ப்படிவதில்லை, அவன் பெருந்தீனிக்காரனாகவும் குடியனாகவும் இருக்கின்றான்'' என்று ஒப்புக்கொள்ளும்போது, அவர்களின் குரல் களில் உள்ள வேதனையை நீங்கள் கேட்க முடிவதில்லையா (உபாகமம் 21:20ஆ)?

கிறிஸ்தவர்களாவது - தனிப்பட்ட உறுதிப்பாடு மற்றும் விசுவாசம் ஆகியவற்றுடன் உண்மையான கிறிஸ்தவர்களாவது - என்பதும், அதன்பின்பு நமது திறனுக்குத்தக்கவாறு மிகச்சிறப்பான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது என்பதும், நாம் நமது பெற்றோருக்குச் செலுத்தக்கூடிய மாபெரும் புகழ்ச்சிக் கொடையாக உள்ளது. நாம் இளம் வயதினராயிருக்கையில் நம்மால் இயன்ற அளவு மிகச் சிறந்தவர்களாயிருக்க வேண்டும்: "பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும்" (நீதிமொழிகள் 20:11; KJV). நாம் முதிர்வயதாயிருக்கும்போது, நம்மால் இயன்ற அளவுக்கு மிகச் சிறந்தவர்களாய் இருக்க வேண்டும். நமது பெற்றோர்கள் மரித்திருந்தாலும் நாம் நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறந்தவர்களாய் இருக்க வேண்டும்; நாம் அவர்களின் நினைவுகளுக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நமது பெற்றோர்கள் கிறிஸ்தவரல்லாதவர்களாய் இருந்தபோதிலும் நாம் நம்மால் இயன்ற அளவு மிகச்சிறந்தவர்களாய் இருக்க வேண்டும்; அவர்கள் உயிருடன் இருந்தால், நாம் நமது உதாரணங்களினால் அவர்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்ள முடியும் (1 பேதுரு 5:1-4). அவர்கள் உயிருடன் இல்லையென்றால், நாம் சத்தியம் என்று அறிந்துள்ளவற்றிற்கு உண்மை நிறைவுடன் இருப்பதன்மூலம் இன்னமும் அவர்களுக்கு புகழ்ச்சியைக் கூட்ட முடியும்.

நாம் நமது பெற்றோருக்கு, நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பானவர்களாய் இருப்பதற்குக் கடன்பட்டுள்ளோம்.

## நமது தொடர்ச்சியான அன்பு

கடைசியாக, நாம் நமது பெற்றோருக்கு நமது தொடர்ச்சியான அன்பையும் அக்கறையையும், அவர்கள் வாழ்நாள் முழுவதும் கடன்பட்டுள்ளோம். இந்த பாடத்தில் நான் எடுத்துரைத்துள்ள சில சத்தியங்கள் குடும்பத்தில் இன்னும் வாழ்ந்துகொண்டுள்ள பிள்ளைகளுக்கு (மற்றும் விசேஷமாக இளம் வயதினருக்கு) முதன்மை யாக நடைமுறைப்படுத்தப்படக்கூடும், ஆனால் இதன் உபதேசங்களில் பல, நம் யாவருக்கும் நமது வாழ்நாள் முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்

படக்கூடியவைகளாய் இருக்கின்றன. நாம் வாழ்கின்ற வரையிலும், நமது பெற்றோருக்கு நமது பாராட்டுதலையும் நமது மரியாதையையும் நமது பரிவிரக்கமுள்ள புரிந்துகொள்ளுதலைச் செயல்படுத்தவும், மற்றும் நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறந்த மகன்களாக அல்லது மகள்களாக இருக்கவும் கடன்பட்டுள்ளோம்.

நமது கடைசிக் கலந்துரையாடலானது, நம்மில் ஏற்கனவே வளர்ந்துள்ளவர்களுக்கு முதன்மையாக எடுத்துரைக்கப்படுவதாக உள்ளது. நாம் வாழ்கின்ற காலம் வரையிலும் நமது பெற்றோருக்கு அன்பையும் அக்கறையையும் தொடர்ந்து காண்பிக்கவும் வெளிப்படுத்தவும் வேண்டும். நாம் இதை நமது வார்த்தைகளினால் - முகமுகமாய்ப் பேசப்படுகிற வார்த்தைகள், தொலைபேசியில் பேசப்படுகிற வார்த்தைகள், கடிதத்தில் எழுதப்படுகிற வார்த்தைகள் ஆகியவற்றினால் - செய்யவேண்டும். நாம் இதை நமது செயல்களினாலும் செய்ய வேண்டும்.

நமது பெற்றோர் முதிர்வயதினராகும்போது அவர்களை பராமரித்தல் என்பது இந்த அன்பின் ஒரு பாகமாக உள்ளது. முன்னதாக நான் 1 தீமோத்தேயு 5:8ஐக் குறிப்பிட்டேன்: "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." அவ்வசனப்பகுதியை நான் பெற்றோருக்கு நடைமுறைப் படுத்தினேன் - மற்றும் அதன் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும் என்று நான் நம்புகின்றேன் - ஆனால் இவ்வசமானது சந்தர்ப்பப்பொருளில், வளர்ந்த பிள்ளைகள் தங்கள் முதிர்வயதான பெற்றோரைப் பராமரிக்க வேண்டும் என்று போதிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.[18]

ஒருமுறை இயேசு போதித்துக்கொண்டிருந்தபோது, பரிசேயரிலும் வேதபாரகரிலும் சிலர் அவரிடம் வந்து, "உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்?" என்று கேட்டனர் (மத்தேயு 15:2அ). இயேசு பின்வருமாறு கடுமையான பதிலுரையைக் கொடுத்தார்:

> நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" என்றும், "தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும்" என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, "எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: 'உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன்' என்று சொல்லி தன் தகப்பனையாவது தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும்" அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள். மாயக்காரரே, ... (வசனங்கள் 3-7).

வேதபாரகரும் பரிசேயரும் தங்கள் பெற்றோர்களிடத்தில், "உனக்கு

நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் (அதாவது, தேவனுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது என்று கூறுதலாகும்) என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன்'' (மாற்கு 7:11ஆ) என்று கூறுவதன் மூலம் தங்கள் கடமைகளை தவிர்க்கமுடியும் என்று நினைத்தனர். *Corban* (கொர்பான்) என்பது "அருகில் கொண்டுவரப்பட்டது'' என்று அர்த்தம் தருகிற எபிரெய வார்த்தையாகும்; இது ஒரு காணிக்கையைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது தேவாலயப் பொக்கிஷ அறை *corbanas* என்று அழைக்கப்பட்டது.[19]

> மதரீதியான நேர்ச்சைகளில் [*corban* என்ற] இந்த வார்த்தையை பயன்படுத்துவதன்மூலம், பொறுப்பற்ற யூதர் ஒருவர் தனது சம்பாத்தியத்தில் இருந்து தனது பெற்றோருக்கு உதவக்கூடியவற்றை சடங்காச்சார ரீதியாகத் தேவனுக்கு (அதாவது, தேவாலயத்திற்கு) அர்ப்பணிக்க முடிந்திருந்தது. இருப்பினும், இந்தப்பணம், மதரீதியான நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற அவசியம் இருந்ததில்லை. கொர்பான் சூத்திரம் என்பது பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குச் செய்யும்படி நியாயப்பிர மாணத்தினால் விதிக்கப்பட்டிருந்த தெளிவான பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பதற்கான ஒரு வழி முறையாகவே இருந்தது. கொர்பான் வாக்குறுதியானது அவசரத்தில் கூறப்பட்டிருப்பினும் கட்டுப்படுத்துவதாகவே இருந்தது என்று நியாயப்பிரமாணத்தின் போதகர்கள் கருத்துக் கொண்டிருந்தனர்.[20]

அந்த மனிதப் பாரம்பரியத்தை இயேசு கண்டனம்பண்ணினார், ஏனென்றால் ஒரு மனிதன் தனது பெற்றோர்கள் முதிர்வயதாகும்போது அவர்கள்மீது அக்கறையில்லாமல் இருந்துகொண்டு, அவர்களை "கனப்படுத்த'' இயலாது. பேட்ஸெல் பேரட் பேக்ஸ்டர் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> சபைக்கு எவ்வளவுதான் சென்றாலும், சபைக்கு எவ்வளவுதான் நிதியுதவி அளித்தாலும், எவ்வளவு கண்டிப்பான ஒழுக்கம் கொண்டிருந்தாலும் இவையாவும் பெற்றோரைக் கனப்படுத்து தலுக்குப் பதிலியாக இருக்க முடியாது.
>
> ஒளியூட்டப்பட்டதென்று நினைக்கப்பட்டுள்ள நமது காலமானது, இந்த சமூகத்தில் பெற்றோர்களை நாம் மறந்து புறக்கணிக்கும் வழிமுறையாக உள்ளது. மருத்துவ அறிவியலானது, நமது மக்கள்தொகையில் அறுபத்து ஐந்து வயதிற்கு மேற் பட்டவர்களின் எண்ணிக்கை, தொடர்ந்து அதிகப்படும் அளவுக்கு விரிவாகியுள்ளது. ஆனால் புறக்கணிக்கப்பட்ட, மறக்கப்பட்ட மற்றும் கண்டுகொள்ளப்படாது விடப்பட்ட முதியவர்களின் மானிடவியல் பிரச்சனையை மருத்துவ அறிவியலினால் தீர்த்துவைக்க இயலாது. இந்த மானிடவியல் பிரச்சனைக்கு, இயேசுகிறிஸ்துவுடன் நாம் கொண்டுள்ள உறவினால் கொண்டு வரப்படக்கூடிய நமது

மனச்சாட்சியின் விழிப்புணர்வே பதிலாக உள்ளது.[21]

## முடிவுரை

நீதிமொழிகள் 28:24ம் வசனம், ஒருவன் தன் தகப்பனிடமிருந்து திருடுதல் என்ற பயங்கரமான பாவத்தைப் பற்றிப் பேசுகிறது. நாம் இப்படிப்பட்ட இழிவான குற்றம் செய்து குற்ற உணர்வு உடையவர்களாய் ஒருபோதும் இருக்க மாட்டோம் என்று நாம் கூறுகிறோம், ஆனால் பெற்றோர்களுக்குக் கொடுக்கும்படி நாம் கடன்பட்டுள்ளவற்றைக் கொடுக்காதிருந்தால் என்னவாகும்? நாம் நமது பாராட்டுதலை, நமது மரியாதையை, நமது கீழ்ப்படிதலை, நமது பரிவிரக்கத்துடனான புரிந்துகொள்ளுதலை மற்றும் நமது ஒத்துழைப்பை அவர்களுக்கு கொடுக்காதிருந்தால் என்னவாகும்? நம்மால் இயன்ற அளவுக்கு நாம் மிகச்சிறந்த பிள்ளைகளாய் இராவிட்டால் என்னவாகும்? அவர்களின் வாழ்நாள் முழுவதிலும் நாம் அவர்களிடம் நமது தொடர்ந்த அன்பையும் அக்கறையையும் காண்பிக்காவிட்டால் என்னவாகும்? இது, நாம் அவர்களிடத்தில் இருந்து பொன்னைக் காட்டிலும் அதிக விலையேறப்பெற்றவற்றைத் திருடியுள்ளோம் என்று ஆகாதா?

பின்வரும் ஜெபத்துடன் நாம் இந்தப் பாடத்தொடரை முடிப்போம்:

> தேவனே, திருமணத்தையும் குடும்பத்தையும் ஏற்படுத்தியதில் நீர்கொண்டுள்ள ஞானத்திற்காக நாங்கள் உம்மைத் துதிக்கின்றோம். இவைகள் எங்கள் வாழ்வில் இருக்கும்படி நீர் எங்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகின்றோம். இப்போது நாங்கள், இரக்கமான கணவர்களாக, தந்தையர்களாக, மனைவியர்களாக, தாய்மார்களாக மற்றும் பிள்ளைகளாக இருப்பதற்கு உதவும்படி உம்மைக் கெஞ்சுகின்றோம். எங்களது மதியீனத்தில் நாங்கள் உமது ஞானத்தைச் சார்ந்திருக்கின்றோம். எங்களது பொறுமையின்மையில் நாங்கள் உமது நீடியபொறுமையைச் சார்ந்திருக்கின்றோம். எங்களது பலவீனத்தில் பலம்பெற, நாங்கள் உம்மைச் சார்ந்திருக்கின்றோம். எங்களது எல்லா குடும்பங்களிலும் நீர் மகிமையடைவீராக. இயேசுவின் விலையேறப்பெற்ற நாமத்தில் ஜெபிக்கின்றோம், ஆமென்.[22]

---

குறிப்புகள்

[1]சிலவேளைகளில் நான், இந்தப்பாடத்தை, "நமது தந்தைக்கு நாம் செலுத்த வேண்டிய ஏழு கடன்கள்" அல்லது "நமது தாய்க்கு நாம் செலுத்த வேண்டிய ஏழு கடன்கள்" என்று எடுத்துரைப்பதுண்டு. [2]குடும்பத்தில் இன்னும் வாழ்ந்துக்கொண்டு, தங்கள் பெற்றோர்களின் அதிகாரத்துவத்திற்குக் கீழுள்ள பிள்ளைகள்மீது, இந்தப்பாடத்தில் அடிப்படை வலியுறுத்தம் உள்ளது. இருப்பினும், இந்தப்பாடத்தின் கடைசிப்பகுதியில், எல்லா வயதிலும் உள்ள "பிள்ளைகளுக்கு" பொதுவான நடைமுறைப்பயன்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. [3]சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள்மீது அன்புகூருவதோ அல்லது அவர்கள்மீது அக்கறைகொள்ளுவதோ

இல்லை என்பதை நான் உணர்ந்தறிந்துள்ளேன், ஆனால் இவைகள்யாவும் விதிக்கு ஒரு விதிவிலக்காக மாத்திரமே உள்ளன. எல்லாரும் இல்லையென்றாலும், உங்கள் உரையைக் கேட்பவர்களில் பலர், மிகச்சிறந்தவற்றைச் செய்யக்கூடிய (அல்லது செய்திருக்கக்கூடிய) பெற்றோர்களைக் கொண்டிருப்பார்கள். [4]இந்தப் பாடத்தை அமெரிக்காவிற்கு வெளியே பயன்படுத்தும்போது, உரையைக் கேட்பவர்களுடன் தொடர்புடைய பல்வேறு விவரிப்புகளைப் பயன்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, நீங்கள் போதிக்கும் இடத்தில் உள்ள பெற்றோர்கள் தாங்கள் பிறந்தபோதிருந்த உலகத்தைக் காட்டிலும் மேன்மையுள்ள ஒரு உலகத்திற்குள் தங்கள் பிள்ளைகளை விட்டிருப்பது எப்படி என்பதற்குப் பல விவரிப்புகளை உங்களால் தரமுடியலாம். [5]Quoted by Batsell Barrett Baxter, *Christ and Your Home* (Abilene, Tex.: Herald of Truth, 1974), 35-36. [6]நாம் ஒவ்வொருவரும் மதிப்புடையவர்களாய் இருக்கின்றோம் என்பதற்கு, தேவன் நம்மீது அன்புகூர்ந்து தமது மகனை நமக்காகத் தந்தார் என்ற உண்மையானது மாபெரும் நிரூபணமாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், பிற மனிதர்கள் நம்மை பாராட்டியிருந்தாலும் இல்லையென்றாலும், நாம் மதிப்புடையவர்களாகவே இருக்கின்றோம். இருந்தபோதிலும், நாம் ஒருவருக்கொருவர் நமது பாராட்டுதலை வெளிப்படுத்த வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது. (எடுத்துக்காட்டாக, எபேசியர் 1:16; 1 தெசலோனிக்கேயர் 5:12 ஆகியவற்றைக் காணவும்.) [7]KJV வேதாகமத்தில் "fear" என்றுள்ளது. நாம் சுட்டிக்காண்பித்துள்ளபடி, இந்தப்பாடத்தொடரில், "fear" என்ற வார்த்தையானது இந்தச் சந்தர்ப்பப் பொருளில், ஆழ்ந்த மரியாதை, பயபக்தி ஆகியவற்றைச் சுட்டிக்காண்பிக்கிறது. [8]KJV வேதாகமத்தில் "setteth light by" என்றுள்ளது - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இது "இலேசாக (அதாவது, மரியாதையற்ற வகையில்) நடத்துதல்" என்பதாக உள்ளது. [9]வேத வசனப்பகுதியானது, காம் என்பவன் தனது தகப்பனுடைய குடிவெறியான நிலையை ஏதோ ஒருவகையில் மரியாதையற்ற முறையில் நடத்தினான் என்று மறைமுகமாய்க் குறிப்பிடுகிறது. [10]எலெனார் ரூஸ்வெல்ட் என்ற அம்மையார், அமெரிக்காவின் முப்பத்தியிரண்டாம் ஜனாதிபதியாயிருந்த ஃபிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட் (1933-45) என்பவரின் மனைவியார் ஆவார்.

[11]Quoted by Baxter, 33. [12]Ibid. [13]Ibid. [14]Ibid., 35. [15]தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் போதிப்பதில் முதன்மையான பொறுப்பைக் கொண்டுள்ளனர், ஆனால் இந்தப் பணிப்பொறுப்பில் தாய்மார்கள் இணைந்து கொள்ள முடியும், அவ்வாறு அவர்கள் இணைந்துகொள்ள வேண்டும். [16]இது, அவர்களின் அறிவுறுத்தல் தேவனுடைய வசனத்தின்படியானது என்று யூகித்துக்கொள்வதாக உள்ளது. எல்லா போதனைகளும் வசனத்தினால் சோதித்தறியப்பட வேண்டும் என்ற உண்மையை இந்தப் பாடத்தில் உள்ளடக்க நீங்கள் விரும்பலாம். [17]Quoted in Baxter, 38. [18]இவ்வசனப்பகுதியானது, முதியவர்களான மற்ற உறவினர்கள் மீது அக்கறை எடுத்துக்கொள்ளுகின்ற வளர்ந்த பிள்ளைகளைப் பற்றியும் பேசுகிறது. [19]*Corbanas* என்பது மத்தேயு 27:6ல் காணிக்கைப்பெட்டி என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையாகும். [20]Kenneth L. Barker, gen, ed., *The NIV Study Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1507.

[21]Baxter, 37-38. [22]இந்தப்பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், முதல் பாடத்தின் முடிவில் உள்ள அடிக்குறிப்பு எண் 7ல் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ள அடிப்படை அழைப்பைப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம்.